27th July 1957]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No such instructions have been received.

(*b*) Does not arise.

Harijan Welfare schools.

* 303 *Q*.— SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have decided to stop opening of Harijan Welfare schools in future; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government took a policy decision in August 1955 that no separate Harijan Welfare schools should be opened in future as the provision of separate schools for Harijan children tend to isolate the community resulting in its segregation.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, ஹரிஜன க்ஷேமநலப் பள்ளிகளில் பகல் உணவு கொடுக்கிற காரணத்தால் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் படிக்க வசதி இருக்கிறது. எதிர்காலத்தில் இந்தப் பள்ளிகளை திறக்கக்கூடாது என்று அரசாங்கம் முடிவு கட்டிவிட்டதால் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பள்ளிகளுக்குப் போகமுடியாத நிலை இருக்கிறது. இது ஹரிஜன முன்னேற்றத் திட்டங்களுக்கு முற்றிலும் முரணாக இருப்பதால் இதை மாற்றிக்கொள்ள சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : தனியாக ஹரிஜன் வெல்பேர் ஸ்கூல் வைத்து அதில் படிக்கும் மாணவர்களுக்கு சாப்பாடு போடப்பட்டுவந்தது. இப்போது வேறு பள்ளிகளிலும் சாப்பாடுபோடும் விஷயத்தைப் பற்றி கவனிக்கப்பட்டு வருகிறது.

SRI P. G. MANICKAM : வரப்போகும் திட்டத்தில் மத்தியான உணவு ஒரு சில இடங்களில் கொடுக்கப்படப் போவதாகத் தெரிகிறது. எல்லா இடங்களிலும் கொடுக்கப்போவதாகத் தெரியவில்லை. ஹரிஜனப் பிள்ளைகள் எந்தெந்தப் பள்ளிகளில் படிக்கிறார்கள் என்று கணக்கெடுத்து அவர்களுக்கு சாப்பாட்டுச் செலவுக்கு " பாக்கெட் மணி " கொடுக்க கவர்ண்மெண்டார் வழி செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : " பாக்கெட் மணி " கொடுப்பது என்பது முடியாது. ஆனால் இதர ஸ்கூல்களில் படிக்கும் மாணவர்களுக்கும் சாப்பாடுபோட ஏற்பாடு செய்யப்படும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஹரிஜன பிள்ளைகளுக்கு மத்தியான உணவு அளிப்பதைப் பார்த்தால் அவர்களுக்கு ஒரு வேளைக்கு $2\frac{1}{4}$ அல்லது $2\frac{1}{2}$ அணா வீதம் செலவாகிறது. இன்னும் சில சமயங்களில் சாமான்களின் விலை அதிகமாயிருப்பதால் அதிகமாகச் செலவாகிறது. குறைவாகவும் செலவாகிறது. இப்பொழுது சாமான்களின் விலை அதிகமாக இருப்பதால் இப்பொழுது கொடுக்கப்படும் தொகையாகிய $2\frac{1}{2}$ அல்லது 3 அணாவுக்கு மேல் ஆனால் அந்த அதிகத் தொகையை கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது அரசாங்கம் இருக்கக்கூடிய நிலைமையில் அப்படிக் கொடுக்கமுடியாது.

MR. SPEAKER : இன்னும் 15 நிமிஷங்கள் எடுத்துக்கொண்டு மற்ற கேள்விகளையும் முடித்துவிடுகிறேன். இதற்கு சபை அனுமதிக்கும் என்று நம்புகிறேன்.

[27th July 1957

SRI S. PAKKIRISAMI PILLAI: சென்னையிலுள்ள சில ஹரிஜனப் பள்ளிக் கூடங்கள் கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடங்களைப் போல் அவ்வளவு சுகமாக இல்லை என்ற காரணத்தால் கார்ப்பொரேஷனுக்கே அந்தப் பள்ளிக்கூடங்களைக் கொடுக்கும்படியான நிலைமையை அப் டி கார்பொரேஷன் கேட்டுக்கொண்டால் கனம் மந்திரி அவர்கள் ஒப்புக்கொள்வார்களா?

THE HON. SRI P. KAKKAN: ஹரிஜனப் பள்ளிக்கூடங்கள் அவ்வளவு சுகமாக இல்லை என்று அங்கத்தினர் சொல்வதை என்னுல் ஒப்புக்கொள்ள முடியாது. அந்தப் பள்ளிக்கூடங்கள் சுகமாக நடக்கிறதா இல்லையா என்பதை கவனிக்க அரசாங்கத்தினுடைய கல்வி அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதை வைத்துக்கொண்டுதான் ஒரு முடிவுக்கு வர முடியும். அதன் மேல்தான் அதைப்பற்றி கவனிக்கப்படும்.

SRI K. R. VISWANATHAN: தனியாக நடந்து வருகிற ஹரிஜனப் பள்ளிக்கூடங்களை மூடிவிட்டு எல்லோருக்கும் பொதுவாக இருக்கும் படியான பள்ளிக்கூடங்களை சில கிராமங்களில் அமைக்கும்படியாகச் செய்வதற்கு சர்க்கார் முன்வருவார்களா?

THE HON. SRI P. KAKKAN: ஹரிஜன வெல்பேர் பள்ளிக்கூடங்கள் இருக்கும் இடங்களில் நல்ல கட்டிடமாகவும் அதிகப்படியான மாணவர்களும் வருவதாக இருந்தால் அந்தப் பள்ளிக்கூடங்களையெல்லாம் பொது பாடசாலைகளாக மாற்ற ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம்.

SRI K. ANBAZHAGAN: ஹரிஜனங்களுக்கு என்று தனியாக பள்ளிக் கூடங்களை நடத்துவது என்பது "செக்ரிகேஷன்" என்கிற மாதிரி தனிமையை உண்டாக்குகிறது என்று அரசாங்கம் கருதுவதை நான் வரவேற்கிறேன். சில ஹரிஜன விடுதிகளில் ஹரிஜன மாணவர்களுக்கு என்று உணவு விடுதிகளை தனியாக வைத்திருப்பதால் அங்கும் தனிமை ஏற்படுகிறது. அங்கே மற்றவர்களில் ஒன்றிரண்டு பேர்களைச் சேர்க்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறதா? "பாக்கெட் மணி" முதலியவைகள் வீண் செலவு என்று கருதினாலும் பள்ளிக்கூடங்களுக்கு கொடுக்கவேண்டிய ஸ்பெஷல் பீஸ், மற்றப்படி புஸ்தகங்கள் வாங்குவது முதலிய முறைகளை அரசாங்கம் கையாளுமா?

THE HON. SRI P. KAKKAN: ஸ்பெஷல் பீஸ், புஸ்தகம் முதலிய செலவுகளுக்கு அரசாங்கம் கொடுத்துக்கொண்டுதான் வருகிறது. ஹாஸ்டல்களை ஹரிஜனங்களுக்கு என்று நடத்தினாலும் அவைகளில் 100-க்கு 15 பேர்களை பின் தங்கியவர்களாகவும் 10 பேர்களை மற்ற மாணர்வர்களாகவும் சேர்த்துக்கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

MR. SPEAKER: Sri K. Vinayakam . . .

SRI K. VINAYAKAM: Thank you very much. When I got up to put an interesting . . . .

MR. SPEAKER: If the hon. Member does not want to put his question, he may sit down. He is not entitled to make any comments on the Speaker's ruling or on the ability of the Speaker to call him when he catches the Speaker's eye. If he does not want to put the question, I have no objection.

(Sri M. Jagannathan rose.)

MR. SPEAKER: One minute Mr. Jagannathan. I think hon. Members have an impression that every one can put a supplementary on every question. There is no such right. I want to disabuse that idea from the minds of Members of that. Every hon. Member

who catches the eye of the Speaker is called. In that, in my opinion of all the members in this House, Mr. Vinayakam has caught his eyes the most. If he still persists in the allegation, the Speaker will take his own action on that.

SRI K. VINAYAKAM : Sir, . . .

MR. SPEAKER : Let the hon. Member sit down.

SRI K. VINAYAKAM : On a personal explanation, Sir.

MR. SPEAKER : The hon. Member will please sit down.

SRI K. VINAYAKAM : Sir, I have never abused . . .

MR. SPEAKER : Will the hon. Member please sit down?

SRI M. JAGANNATHAN : கிராமப் பகுதிகளில் இருக்கின்ற ஒவ்வொரு ஹரிஜன க்ஷேம நல பள்ளிக்கூடங்களில் ஹரிஜன மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளப்படும்போது அங்கே ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் தீண்டாமை கையாளப்படுகிறது என்பதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளுமா? அப்படி இருந்தால் தீண்டாமையை ஒழிப்பதில் அரசாங்கம் தக்க நடவடிக்கையை எடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கிராமப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் தீண்டாமை கையாளப்படுமானால் அந்தப் பாடசாலைகள் மூடப்படும் என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Grants to fishermen to purchase steam launches.

* 304 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether any amount has been granted to fishermen in Madras for the purchase of steam launches for catching fishes in the Madras Coast?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The Government have not sanctioned any amount for payment to fishermen for purchase of steam launches for fishing, but the Government have a scheme for supply of motorised boats to fishermen. They have sanctioned so far the construction of 31 pablo-type fishing boats fitted with marine diesel engines for lease or sale to groups of fishermen through Fishermen Co-operative Societies, at a subsidized price recoverable in instalments, in seven years. Fifteen more pablo-type boats are expected to be built during 1957–58.

White Paper on Education.

* 305 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have given effect to the recommendations of the Committee on White Paper on Education; and

(*b*) if not, the reasons therefor?